# தொன் போஸ்கோ கல்லூரி

அதியமான் புறவழிச் சாலை, சோகத்தூர் அஞ்சல், தருமபுரி 636 809

தொலைபேசி : 04342-291570, 293800, 292210

மின்னஞ்சல் : dbc155@live.in இணையதளம் : www.dbcdharmapuri.edu.in


## நாட்டு நலப்பணித் திட்டம்

## உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி

நாள்: 11.08.2017, இடம்:ரோட்டரி அரங்கம்,

நேரம்: காலை 08.30 - மாலை 10.15.

தருமபுரி மாவட்ட காவல்துறையும், சேலம் மணிப்பால் மருத்துவமனையும் இணைந்து நடத்திய உடல் உறுப்பு தான விழிப்புணர்வு கருத்தரங்கமும், பேரணியும் ரோட்டரி அரங்கத்தில் நடைபெற்றன. 11.08.2017 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு கருத்தரங்கமும் 9.30 மணிக்கு வழிப்புணர்வு பேரணியும் நடத்தப்பட்டன. இந்நிகழ்வில் தருமபுரி மாவட்ட காவல் ஆய்வாளர் திரு. காந்தி அவர்களும், மணிபால் மருத்துவமனை மருத்துவர்களும் உடல் உறுப்பு தானம் பற்றி விழிப்புணர்வு உரை நிகழ்த்தினர். பின்னர் உடல் உறுப்பு தானம் செய்வது பற்றி வினாக்களை கல்லூரி மாணவர்கள் எழுப்ப அதற்கு மருத்துவர்கள் தகுந்த பதில் அளித்தனர்.

இந்நிகழ்விற்குப் பின்னர் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல் ஆய்வாளர் திரு. காந்தி அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார். ரோட்டரி அரங்கத்திலிருந்து துவங்கிய பேரணி தருமபுரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிறைவு பெற்றது. இந்நிழ்வுகளில் தொன்போஸ்கோ கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக்கொண்டும், விழிப்புணர்வு வாசகங்களை முழங்கிக் கொண்டும் சென்றனர்.

DON BOSCO COLLEGE ★ SOGATHUR-(PO)-DHARMAPURI-(Dt)-636 809.

முதல்வர்

PRINCIPAL DON BOSCO COLLEGE DHARMAPURI

உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி















SOGATHUR-(P.O), DHARMAPURI-(Dt)-636 809.

டொன்போஸ்கோ கல்லூரி

நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)

உடல் உறுப்பு தான விழிப்புணர்வு

நாளேட்டு அறிக்கை பேரணி

தினபூமி, சேலம்
ஆகஸ்ட் 12, 2017

# சேலம் மணிப்பால் மருத்துவமனை சார்பில் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு பேரணி



தருமபுரி,ஆக.12

சேலம் மணிப்பால் மருத்துவமனைகள் தர்மபுரி காவல் துறையுடன் இணைந்து 'உறுப்பு தானம்' பற்றிய விழிப்புணர்வை உருவாக்க மற்றும் இதற்கு மக்களை ஊக்குவிக்க ஒரு பேரணிக்கு இன்று ஏற்பாடு செய்தது.

இந்த பேரணியானது தர்மபுரி காவல்துறை கண்காணிப்பாளர், பி. கங்காதர் மணிப்பால் மருத்துவமனைகள் கல்லீரல் மாற்று சிகிச்சை பிரிவின் தலைவர் மற்றும் கல்லீரல் மருத்துவ ஆலோசகர், டாக்டர் ஒலித் செல்வன், மற்றும் சேலம் மணிப்பால் மருத்துவமனைகள் யூனிட் தலைவர், டாக்டர் புனீத் மேத்தா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது. ரோட்டரி ஹாலில் துவங்கி தர்மபுரி அரசு மருத்துவமனையில் முடிவுற்ற இந்த பேரணியில் சுமார் 200 காவலர்களும் மற்றும் மாணவர்களும் பங்குகொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசிய தர்மபுரி காவல்துறை கண்காணிப்பாளர், பி. கங்காதர் ஐ.பி.எஸ் "சேலம் மணிப்பால் மருத்துவமனையுடன் இணைந்து இந்த உன்னதமான மற்றும் பெரிய காரணத்திற்காக எங்கள் ஆதரவை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். வாழ்க்கை விலைமதிப்பற்றது மற்றும் உங்களுக்கு இரண்டாவது வாழ்க்கை வாய்ப்பு கிடைத்தால் அது ஒரு அதிசயம். நாம் நமது மூட நம்பிக்கைகள் மற்றும் தயக்கங்கள் ஆகியவற்றை தவிர்த்து முழு மானதுடன் இதனை ஆதரிக்க வேண்டும். மரணத்திற்குப் பிறகு அடுத்தவருக்கு வாழ்க்கை அளிப்பது மிக உன்னதமான செயலாகும். இதனை நம்மால் முடிந்த அனைத்து வழிகளிலும் ஊக்குவிக்க வேண்டும். நான் அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் மற்றும் அர்ப்பணிப்பிற்காகவும் மருத்துவமனை மற்றும் மருத்துவ குழுவினரை வாழ்த்துகிறேன்." என்றார்.

DON BOSCO COLLEGE ★ SOGATHUR-(P.O), DHARMAPURI-636 809.

DON BOSCO COLLEGE DHARMAPURI-636 809.

முதல்வர்

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

# மாற்று உடல் உறுப்பு கிடைக்காமல் ஆண்டுக்கு 5லட்சம் பேர் உயிரிழப்பு



சேலம் மணிபால் மருத்துவமனை, தர்மபுரி காவல் துறை சார்பில் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பேரணி தர்மபுரியில் நடந்தது.

## கருத்தரங்கில் தகவல்

தர்மபுரி, ஆக.12: நாடு முழுவதும் மாற்று உடல் உறுப்பு தானத்திற்காக காத்திருந்து, ஆண்டுக்கு 5லட்சம் பேர் இறந்து போகிறார்கள் என விழிப்புணர்வு கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

சேலம் மணிப்பால் மருத்துவமனைகள், தர்மபுரி காவல் துறை இணைந்து உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் பேரணியை தர்மபுரியில் நடத்தின. பேரணியை தர்மபுரி டிஎஸ்பி காந்தி தொடங்கி வைத்தார். மணிப்பால் மருத்துவமனைகள் கல்லீரல் மாற்று சிகிச்சை பிரிவின் தலைவர் மற்றும் கல்லீரல் மருத்துவ ஆலோசகர், டாக்டர் ஒலித்செல்வன், யூனிட் தலைவர் டாக்டர் புனீத் மேத்தா முன்னிலை வகித்தனர். தர்மபுரி ரோட்டரி ஹாலில் தொடங்கிய பேரணி, தர்மபுரி அரசு மருத்துவமனையில் முடிந்தது. இதில் போலீசார் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் டாக்டர் ஒலித் செல்வன் பேசுகையில், 'மருத்துவ விஞ்ஞானத்தில் பெரும் முன்னேற்றங்கள் இருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் உறுப்பு மாற்று மட்டுமே உயிர் காப்பதற்கான சிறந்த வழியாகும். மணிப்பால் மருத்துவமனைகள் இதுவரை 18 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள், 11 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, உடல் உறுப்பு கிடைத்தல் மற்றும் உடல் உறுப்புக்காக காத்திருத்தல் ஆகியவற்றுக்கு இடையே, பெரிய இடைவெளியின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் சுமார் 5 லட்சம் பேர் இறக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட லட்சம் பேர் கல்லீரல் நோயால் இறக்கிறார்கள். சுமார் 2.20 லட்சம் பேர், சிறுநீரக மாற்றுக்காக காத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10 லட்சம் பேர், கார்னியா மாற்றத்துக்காக காத்திருக்கிறார்கள். 50 ஆயிரம் பேர் இதயமாற்று சிகிச்சைக்காக காத்திருக்கிறார்கள்,' என்றார்.

முதல்வர்